வகுப்பு : 7

# இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2024-25

தேர்வு எண்

நேரம் : 2.00 மணி|

## தமிழ்

|மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி - I

I. சரியான விடையைத் தெரிவு செய்க. 10X1=10

1. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ---------
   அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்
2. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ---------
   அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு
3. 'கேடில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ---------
   அ) கேடி + இல்லை ஆ) கே + இல்லை இ) கேள்வி + இல்லை ஈ) கேடு + இல்லை
4. கல்வியில்லாத நாடு ------- வீடு.
   அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத
5. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ---------
   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு
6. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை -------
   அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46
7. அன்னை தான் பெற்ற ------ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்.
   அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின்
8. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல் ---------
   அ) எழுத்து ஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி
9. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்.
   அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நாடி
10. ------- தீமை உண்டாகும்.
   அ) செய்யத் தகுந்த செயல்களைச் செய்வதால்
   ஆ) செய்யத் தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
   இ) செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
   ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

பகுதி - II பிரிவு – 1

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4X2=8

11. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
12. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
13. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
14. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
15. 'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?
16. ஓவியங்களின் வகைகள் யாவை?

பிரிவு – 2

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5X2=10

17. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?
18. கலைச் சொல் தருக.
   அ) Storm ஆ) Degree
19. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?
20. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.
   அ) -------- சுடும்.
   ஆ) ------- மணம் வீசும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

21. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?

22. சாலைகள் சார்ந்து உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

23. குறிப்புகளைக் கொண்டு 'ம' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.

அ) கதிரவன் மறையும் நேரம்

ஆ) எழுத்துக்களை ஒலிக்க ஆகும் கால அளவு

பகுதி - III

IV. அடிமாறாமல் எழுதுக. 3+2=5

24. "தொட்டனைத்து" என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

25. அ) 'வானம்' எனத் தொடங்கும் கலங்கரை விளக்கம் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) 'கட்டி அடிக்கையால்' – எனத் தொடங்கும் கீரைப்பாத்தியும் குதிரையும் பாடலை எழுதுக.

பகுதி - IV

V. ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3X3=9

26. சிற்பங்களும், ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

27. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

28. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

29. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சாலை விபத்துகளைத் தவிர்க்கச் சாலைவிதிகளை அறிந்து ஒவ்வொருவரும் வாகனங்களை ஓட்ட வேண்டும். சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டு விட்டுப்போடப்பட்டுள்ள வெள்ளைக் கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரி சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள் கோடு வரையப் பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக் கூடாது. இரட்டை மஞ்சள் கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச்சாலையைப் பயன்படுத்தக்கூடாது.

வினாக்கள்

அ) சாலையின் எந்தப் பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?

ஆ) விட்டு விட்டுப் போடப்படும் வெள்ளைக் கோடு எதனைக் குறிக்கும்?

இ) எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?

பகுதி - V

VI. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 1X6=6

31. அ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு "எங்கள் ஊர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

[முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை]

பகுதி - VI

VII. விரிவாக விடையளிக்க. 2X6=12

32. அ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், வள்ளுவர் கோட்டம் / திருவள்ளுவர் சிலை இடத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்.?

33. அ) இக்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.

(அல்லது)

ஆ) நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com